# நவம்பர் – 22 – வியாழன்

## புனித செசிலியா

## அல்லேலூயா! ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்: திபா. 149:1

### முதல் வாசகம் : திருவெளிப்பாடு 5 : 1 – 10

சகோதர சகோதரிகளே! அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் ஒரு சுருளேட்டைக் கண்டேன். அதில் உள்ளும் புறமும் எழுதியிருந்தது. அது ஏழு முத்திரை பொறிக்கப் பெற்று மூடப்பட்டிருந்தது."முத்திரைகளை உடைத்து, ஏட்டைப் பிரிக்கத் தகுதி பெற்றவர் யார்?" என்று வலிமைமிக்க வானதூதர் ஒருவர் உரத்த குரலில் முழங்கக்கண்டேன்.நூலைத் திறந்து படிக்க விண்ணுலகிலோ மண்ணுலகிலோ கீழுலகிலோ இருந்த எவராலும் இயலவில்லை. சுருளேட்டைப் பிரித்துப் படிக்கத் தகுதி பெற்றவர் எவரையும் காணவில்லையே என்று நான் தேம்பி அழுதேன். அப்பொழுது மூப்பருள் ஒருவர் என்னிடம், "அழாதே, யூதா குலத்தின் சிங்கமும், தாவீதின் குலக்கொழுந்துமானவர் வெற்றி பெற்றுவிட்டார் அவர் அந்த ஏழு முத்திரைகளையும் உடைத்து ஏட்டைப் பிரித்துவிடுவார்" என்றுகூறினார்.அந்த நான்கு உயிர்களும், மூப்பர்களும் புடை சூழ, அரியணை நடுவில் ஆட்டுக்குட்டி ஒன்று நிற்கக்கண்டேன். கொல்லப்பட்டதுபோல் அது காணப்பட்டது. அதற்கு ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் இருந்தன. அக்கண்கள் மண்ணுலகெங்கும் அனுப்பப்பெற்ற கடவுளின் ஏழு ஆவிகளே. ஆட்டுக்குட்டி முன்சென்று, அரியணையில் வீற்றிருந்தவரின் வலக்கையிலிருந்து அந்த ஏட்டை எடுத்தது. அப்பொழுது அந்த நான்கு உயிர்களும்இ இருபத்து நான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டிமுன் வீழ்ந்தார்கள் அவர்கள் ஒவ்வொருவரும் யாழும், சாம்பிராணி நிறைந்த பொற் கிண்ணங்களும் வைத்திருந்தார்கள். இறைமக்களின் வேண்டுதல்களே அக்கிண்ணங்கள். அவர்கள் புதியதொரு பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள் "ஏட்டை எடுக்கவும், அதன் முத்திரைகளை உடைத்துப் பிரிக்கவும் தகுதி பெற்றவர் நீரே. நீர் கொல்லப்பட்டீர் உமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு, மக்களினம் ஆகிய அனைத்தினின்றும் மக்களைக் கடவுளுக்கென்று விலை கொடுத்து மீட்டுக்கொண்டீர். ஆட்சியுரிமை பெற்றவர்களாகவும், குருக்களாகவும் அவர்களை எங்கள் கடவுளுக்காக ஏற்படுத்தினீர். அவர்கள் மண்ணுலகின்மீது ஆட்சி செலுத்துவார்கள்."

**பதில்பாடல் :** ஆட்சியுரிமை பெற்ற குருக்களாய் கடவுளுக்காக ஏற்படுத்தினீர்

### நற்செய்தி : லூக்கா 19 : 41 - 44

அக்காலத்தில் இயேசு எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து அழுதார்."இந்த நாளிலாவது அமைதிக்குரிய வழியை நீ அறிந்திருக்கக்கூடாதா? ஆனால் இப்போது அது உன் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. ஒருகாலம் வரும். அப்போது உன் பகைவர்கள் உன்னைச்சுற்றி அரண் எழுப்பி, உன்னை முற்றுகையிடுவார்கள். உன்னையும், உன்னிடத்திலுள்ள உன் மக்களையும் எப்பக்கத்திலுமிருந்து நெருக்கி அழித்து உன்னைத் தரை மட்டமாக்குவார்கள். மேலும் உன்னிடம் கற்கள் ஒன்றின்மீது ஒன்று இராதபடி செய்வார்கள். ஏனெனில் கடவுள் உன்னைத் தேடி வந்த காலத்தை நீ அறிந்து கொள்ளவில்லை" என்றார்.

**தியானம்:** எருசலேம் என்றாலே அமைதியின் நகர் என்று தான் அர்த்தம். 'சாலோம்' என்றால் அமைதி என்று பொருள். ஆனால் பெயரில் அமைதியைத் தாங்கி இருந்த ஊர் உண்மையில் அமைதியை அறியாத நகரமாக இருக்கிறது. (இன்று கூட எருசலேம் யூதர்கள் மற்றும் பாலஸ்தீனர்களால் உரிமை கொண்டாடப்படுவதன் காரணமாக அமைதியின்மைக்கும் காரணமான நகரமாக விளங்குகின்றது. எருசலேமைப் பார்த்து இயேசு அழுத இந்நிகழ்வு பழைய ஏற்பாட்டில் எரேமியா எருசலேமைப் பார்த்து அழுத நிகழ்வுக்கு ஒப்பாக இருக்கிறது. பாபிலேனியர்கள் எருசலேமைக் கொள்ளையிட்ட போது எரேமியா அதைப்பார்த்து அழுதார். மக்களின் கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும், இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வோருக்க்கு அமைதியைக் கொணரவும், இந்த உலகில் தோன்றியவர் இயேசு. ஆனால் இந்த அமைதியின் அரசரை எருசலேம் நகரத்தவரும் தலமைக்குருக்களும் ஆபிரகாமைப் போல இருகரம் நீட்டி வரவேற்காமல் அவர் மட்டில் எதிர் மறையான மனப்பக்குவம் கொண்டிருந்தனர். இந்த எதிர் மறையான பக்குவத்தின் காரணமாக எருசலேம் நகரத்தவர் தங்கள் மீதான சாபத்தை தாங்களே வருவித்துக் கொண்டனர். அமைதியின் அரசரான இயேசு இன்றும் நம் உள்ளங்களுக்கு அமைதியைக் கொண்டுவரத் தயாராக இருக்கின்றார். அவர் அமைதியை தரத்தயாராக இருந்தாலும், நம் உள்ளத்தில் தங்க இயலாது. அமைதியைப் பெறுகின்ற அளவிற்கு நம் உள்ளத்தை தாழ்ச்சி உள்ளதாக மாற்ற அழைக்கப்படுகின்றோம். எனவே நாம் நம்முடைய உள்ளம் அமைதியின் உறைவிடமா? அல்லது பிளவின் இருப்பிடமா? என்பதை தியானிப்போம்.